**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**வத்திராயிருப்பு**
**அசல் வழக்கு எண். 15/2025**

**வா.சா. 1 மாரிமுத்து, S/o பெரியசாமி**

**நாள்: 15.04.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1)** எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விபரங்கள் தெரிவித்தது யார் என்றால் நான் தான். நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் கூலி வேலை பார்த்து வருகிறேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் என்ன வகையான சொத்துக்கள் என்றால் ஒரு சொத்து காடு மற்றும் மற்றொரு சொத்து வீடு ஆகும்.

2) எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். என்னுடைய அனைத்து குழந்தைகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்று சொன்னால் சரிதான் ஆனால் ஒரு மகளுக்கு திருமணம் நடைபெற்று விவாகரத்து ஆகிவிட்டது. வழக்கு சொத்துக்களைத் தவிர எனக்கு வேறு சொத்துக்களும் உள்ளது என்று சொன்னால் என்னுடைய மனைவி பெயரில் உள்ளது. என்னுடைய மனைவி பெயரில் இருந்து வரும் சொத்துக்களை நான் தான் விவசாயம் செய்து பராமரித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். வழக்குரை

2 வது தபசில் சொத்தில் 1 வது பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தது போக மீதமுள்ள சொத்துக்கள் என் வாசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்தில் உள்ள வீட்டில் தான் நானும் என்னுடைய மகளும் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான்.

3) என்னுடைய மனைவி பெயரில் உள்ள ஒரு வீட்டை பொறுத்து என்னுடைய வாரிசுகள் என் பெயரில் விடுதலை ஆவணம் எழுதி கொடுத்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். இது போக என்னுடைய பெயரை வேறு நிலங்கள் 40 சென்ட் அளவில் உள்ளது என்று சொன்னால் வேறு எந்த நிலமும் என்னுடைய பெயரில் கிடையாது. என்னுடைய வாரிசுகள் என்னுடன் சுமுகமான உறவில் தான் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2 வது வழக்கு சொத்தான காலி மனையை தான் எனது மகளான 1 வது பிரதிவாதியின் பெயருக்கு 2009 வது வருடத்தில் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

4) என்னுடைய மகளுக்கு நான் எழுதிக் கொடுத்த சொத்தில் வங்கியில் கடன் பெற்று என்னுடைய மகள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்துக்கு 1 வது பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி மின் கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் பட்டா அவருடைய பெயரில் இல்லை. 1 வது பிரதிவாதி 2 வது வழக்கு சொத்துக்கு அவருடைய பெயரில் பட்டா ஏற்படுத்தி, தீர்வை செலுத்தி, மின்கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வருகின்ற விபரம் எனக்கு தெரியும் என்றும், வழக்குக்காக அவருடைய பெயரில் எதுவும் ஏற்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5) 1 வது பிரதிவாதி, வங்கியில் அடமானம் வைத்த சொத்துக்கு ஆதரவாக வங்கிக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தில் நான் சாட்சியாக

கையெழுத்து செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான தான செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னுடைய மகள் பெயருக்கு எழுதி வைக்கும் பொழுது முழு சம்மதத்துடன் தான் எழுதி வைத்தேன் என்று சொன்னால், என்னுடைய மகள் எனக்கு செய்து கொடுத்த உத்திரவாதமான என்னை பராமரித்து வருவேன் என்று கொடுத்த உத்திரவாதத்தின் அடிப்படையில் தான் எழுதிக் கொடுத்தேன். மேற்படி ஆவணத்தை என்னுடைய மகள் கட்டாயப்படுத்தி எழுதி வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் என்னை பராமரித்துக் கொள்வதாக உறுதி அளித்தார்.

6) ஆவணம் எழுதிக் கொடுத்த அன்றைய தினமே ஆவணத்தில் கண்ட சொத்தின் சுவாதீனத்தை என்னுடைய மகளிடம் ஒப்படைத்து விட்டேன் என்று சொன்னால் சரிதான். 1வது வழக்கு சொத்துக்கு 1வது பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி தற்பொழுது வரை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை என்னுடைய பெயரில் தான் இருந்தது வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் என்னுடைய மகள் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டுள்ளது. 1வது வழக்கு சொத்தை சுமார் 20 வருடங்களுக்கு மேலாக 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

7) வழக்கு சொத்துக்களுக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி வருவதற்கு நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அந்த ஆவணத்தை எந்த காலத்திலும் மாற்றவோ ரத்து செய்யவும் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னை பராமரித்துக்

கொள்ள வேண்டும் என்ற எந்த ஒரு நிபந்தனைகளும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்கள் எழுதிக் கொடுத்து 25 வருடங்கள் கழித்து அதை ரத்து செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8) நான் என்னுடைய மற்ற வாரிசுகளின் தூண்டுதலின் பெயர்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணங்களை ரத்து செய்ய வருவாய் வட்டாட்சியரிடம் மனு செய்தேன் என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த மனுவினை விசாரணை செய்த வருவாய் வட்டாட்சியர் ஆவணங்களை ரத்து செய்ய முடியாது என்று கூறிவிட்டார் என்று சொன்னால் வழக்கு நிலுவையில் இருப்பதால் தலையிட முடியாது என்றுதான் கூறிவிட்டார்கள். 1வது வழக்கு சொத்தை 1வது பிரதிவாதி அவருடைய மகனான 2வது பிரதிவாதிக்கு கடந்த 2017 வது வருடத்தில் தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய மகன்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அவர்கள் மோசடியாக வாங்கி விட்டார்கள்.

9) பேரனுக்கு நான் தான் முன்னின்று தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கைப்பேசி எண் எனக்கு தெரியுமா என்றால் 9943953735. 2வது பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய கைபேசி எண் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த ஆவணத்தை நான் தான் முன்னின்று என்னுடைய பேரனுக்கு

எழுதிக் கொடுத்தேன் என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரிந்திருந்தும் தற்பொழுது எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்திலும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய ஆவணத்தை எழுதிய எனக்கு உரிமை இருப்பதாக எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10) வா.சா.ஆ.2 ஆவணத்திலும் என்னை பராமரிப்பு வர வேண்டும் என்று எந்த நிபந்தனைகளும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் வழக்குச் சொத்துக்களுக்கு தீர்வை செலுத்தி சுமார் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் அதனால் எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1வது வழக்கு சொத்தை என்னுடைய மகள் என்னிடம் கிரையமாக கொடுக்குமாறு கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. கிரையம் எழுதிக் கொடுப்பதற்கு முத்திரைத்தாள் கட்டணம் அதிகமாக வந்த காரணத்தினால் தான் தான செட்டில்மெண்ட் ஆவணமாக நான் என்னுடைய மகளுக்கு எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்றும் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு